உ

கடவுள் துணை.

கள்ளுக்கடைசிந்தென்னும்

குடியர்சிந்து.

இவை

குயப்பேட்டை.

வீ. இராஜூமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

18

உ

கடவுள் துணை.

கள்ளுகடை சிந்துஎன்னும்

குடியர்சிந்து.

விருத்தம்.

நம்பினன் யிருந்தகள்ளே நாடியை யறிந்தகள்ளே, தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பறை கண்டகள்ளே, வம்புநீசெய்தாய்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளே, சொம்புபோல்குடுவைகள்ளே சோறுபோல் கொதிக்குங்கள்ளே, தங்கம்போ லானகள்ளே தைரியங்கொடுக்குங்கள்ளே, எங்களை வளர்க்குங் கள்ளே எங்கேபோ யொளித்தாய்கள்ளே, சிங்கம்போ லெகுருங்கள்ளே ஜெயிலுக்கு அனுப்புங்கள்ளே, பொங்கியேவழியுங்கள்ளே புறப்பட்டு வருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு.

ஜாடியே உனக்கொருகும்பிடு--அந்த
சாராயங்குடித்தாக்கால் பேதியெடுக்குது
புட்டியேஉனக்கொருகும்பிடு—அந்த
பீரைகுடித்தாக்கா சோரைகெடுக்குது

கள்ளே உனக்கொருகும்பிடு— அந்த
கஞ்சாவடித்தாக்கா நெஞ்சைவுலத்துது
மரமே உனக்கொருகும்பிடு—அந்த
மதத்தையிழுத்தால் பலத்தைக்கெடுக்குது
எப்போவருவாயோகள்ளே—உனக்கு
இதுஞாயமல்லாநீ எழுந்துவாகள்ளே.

இ-ம்-நாதநாமக் கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு—ஈஸ்வரன்போலாக
வந்துதேகள்ளு.

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கரிவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிக்கொண்டு-வந்

சரணங்கள்.

ஆதிவேலைகளெல்லாம் அடுமாண்டுபோச்சுது
அஞ்சணாஆரணா படியொன்றுஆச்சுது
சோதியதன்சுருக்கு சூரியனுக்கும்யேது
சுள்ளைக்கடித்துக்கொண்டு உள்ளுக்குக்கள்விட்டால்
யெழும்புதேபோதை—தலைக்குமேல் கைதூக்கி
கடிக்குதேபல்லை

ஆரணும்பானுலும் ஆட்டின்மயிரேபோச்சி
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்சீசீ

பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பாட்டாக்கள்ஒருமூச்சி பாணந்தடுத்துபோச்சி (வந்)

ரகுபதிகடைக்கள்ளு ராவெல்லாங்கொடையுது
ரவுண்டுடாணுக்கள்ளு கிருக்குகள்வாங்குது
பரச்சேரிகடைக்கள்ளு பாடுதுஆடுது
பாழுஞ்சுகோட்டுகள்ளு தலைகீழாய் துள்ளுது

இதுவென்னகள்ளு—பலவைதொட்டிகள்ளு
ஒழுவுதேசொள்ளு

பெண்சாதிபெதிர்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினுவென்றால் சொல்லையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது

பெடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதே மொரப்பு. வந்து

செஞ்சி ஏகாம்பர முதலியாராலியற்றிய

குடியர் அலங்காரம்

வெண்பா.

காலைக்குடியரெல்லாங் கவைக்குதவார்கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெறியனைப்போலலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குபோவார்
தருமமோகுடியர்க்குத் தான்.

புருஷன்சொல் சிந்து.

மூக்கிமுக்கி கஷ்டப்பட்டு கேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன் பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுநீ பண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந் தாக்கடி கண்ணே

பெண் சொல்லல்.

கள்ளைமறந்திடடா குடிகார பாவி
காலையில் குடியாதடா சதிகாரப் பாவி
பிள்ளைகுட்டிபெத்தாயோடா சண்டாளப் பாவி
யின்னம்புத்திவல்லையோடா குடிகாரப் பாவி

(புரு) சேனைநாள்பழக்கமடி முட்டாளு பெண்ணே
ஜென்பத்திலேவூரிபோச்சு கெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தேனென்று எண்ணாதேபெண்ணே
நாலுமூணுதலம்பரையாய் நடக்குது கண்ணே

(பெ) குடிக்கேனென்றுசத்தியங்கள்பண்ணையே பாவி
குடல்பழுத்துதென்றுகதை சொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்கிப்போதாதே பாவி
சாப்பிட்டாலும் வீண்சண்டைகள் செய்யாதே பாவி

(புரு) மனவருத்தப்படுவதாலே கேளடி பெண்ணே
மாஜினமாகிலுந்தின்று வாரண்டி கண்ணே
துணதுணென்று பேசாதடி முட்டாளு பெண்ணே
துட்டுகூடகுரைஞ்சிபோச்சி தாக்குது கண்ணே

(பெ) பணம்போனாலும் போகுதையாஎந்தன்கணவா
பங்கிவுண்டைபழக்கம்வேண்டாம் எந்தன் கணவா
குணத்தின்படி நடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமுட்டுங்குடுக்கவேண்டாம் எந்தன் கணவா

(புரு) கும்மாவுன்னை குடுப்பதில்லைகேளடிபெண்ணே
குடிக்கிமட்டும் ஒத்தைபணம் தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்று எண்ணுதே பெண்
சோத்துப்பானை யெகிரிப்பூடுங் தவறினல் கண்ணே

(பெ) சோத்துப்பானைஎகிரிப்போனல் கேளடா பாவி
உன்சூத்துதாண்டாகாஞ்சிபோகும் குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தை மறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும் நெட்டிவிட்டு வந்தாயே பாவி

(புரு) குடியருக்கு சத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம் கேளடி பெண்ணே
படியடித்தும்போதைகொஞ்சங்காணண்டிபெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்து வருவண்டி கண்ணே

(பெ) பட்டைமூஞ்சிவிடிவிழுக குடிகாரப் பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால் மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணு யழிக்காதே பாவி
காலங்கருப்பானதினல் சொன்னேண்டா பாவி

(புரு) பணம்போனலும்ஷட்டம்போச்சிகேளடிபெண்
பட்டையடித்தால்கையுங்காலு முரைக்குது பெண்

கணக்குப்பார்த்துகுடிக்காவிட்டால்கேளடிபெண்ணே
காலணுகூடகையில் கிட்டாது பெண்ணே

(பெ) பஞ்சைப்போலேகற்றகல்வி படிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல்குடித்தாரோ பாவி
செஞ்சி-ஏகாம்பரங்கவியை கேளடா பாவி
சிரிக்குதுஉலகமெல்லாங் குடிகாரப் பாவி

தெலுங்குந்-தமிழும்.

ஓகநெலகா படினபாடு
ஊரந்த அடிகிரூடு ஜாடியே கள்ளுஜாடியே

பீருபுட்டிசெய்தமோசம்
பீப்பாதண்ணியைகேட்டுபாருஜாடியேகள்ளுஜாடியே

போசேடப்புடுசுருகண்டாதி
போயினவதலா ஏமிலேதுபுட்டியே கள்ளுபுட்டியே

பட்டைதண்ணியைநம்பிநம்பி
சொட்டுமூத்ரங்கூடகாணும் புட்டியே கள்ளுபுட்

கள்ளுவொச்சினமாடவினி
பாலிவாணுபயப்படுந்தி காவடி கள்ளுகாவடி

இத்தனைநாள் பட்டபாடு
யாரைகேட்டால்தெரியபோவுதுகுடுவையே கள்ளுகு

சிறுமணவூர்முனிசாமி
செப்பிசெப்பிநவ்விணுடுமொந்தையே கள்ளுமொந்

பரிபூரணுனந்தபோதம் னேற்று
பகலெல்லாமழைபெய்து சுவரெல்லாம்ஓதம்

சாருயப்புட்டியைகம்பு— அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லே கொம்பு—யாரை
கண்டதேகுத்திஞல் கயஞதேகெம்பு தரு

பெற்றதாய்சொல்லேக்கேளாதே—உந்தன்
பெண்டாட்டிபிள்ளேக்கி கஞ்சிவார்க்காதே
உற்ருரைஊரில் சேர்க்காதே—உந்தன்
ஆயுசுக்கும்ஒருகாசு தருமஞ்செய்யாதே தரு

பெற்றதாயாரைதடிகொண்டுமோட்டு—பெற்ற
தகப்பனேயும்பாட்டனேயும் வீட்டைவிட்டோட்டு
உற்ருரைஉரவாரைமாட்டு—இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு

தருமஞ்செய்யாதிருமனமே—நாளே
கருமதீதைசெய்தாலே கடைத்தேறலாமே. தரு

கள்ளுகடைசிந்து

முற்றிற்று.